GOVERNMENT OF PUDUCHERRY

OFFICE OF THE DEPUTY DIRECTOR (FW & MCH)

# WORLD POPULATION DAY OBSERVATION 11TH JULY 2017

## UT OF PUDUCHERRY

### WPD - STUDENTS' RALLY FLAG OFF BY MEDICAL SUPERINDENTEDNT (IGGGH&PGI)









WAR AGAINST POPULATION EXPLOSION


உலக மக்கள் தொகை தினம்
2017


புதுச்சேரி
உலக
திட்டமிட்ட
Family welfare

தினத்தந்தி

புதுச்சேரி 12-7-2017

### கிராமப்புற மக்களிடம்

# குடும்ப கட்டுப்பாட்டின் அவசியத்தை விளக்கவேண்டும்

## நாராயணசாமி வேண்டுகோள்



உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களை படத்தில் காணலாம்.

புதுச்சேரி, ஜூலை.12-

கிராமப்புற மக்களிடம் குடும்ப கட்டுப்பாட்டின் அவசியத்தை விளக்கவேண்டும் என்று முதல்-அமைச்சர் நாராயணசாமி வேண்டுகோள் விடுத்தார்.

### விழிப்புணர்வு ஊர்வலம்

உலக மக்கள்தொகை தினம் புதுவை அரசின் சுகாதாரத் துறை சார்பில் நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி கல்லூரி மாணவ, மாணவிகளின் விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று நடந்தது.

புதுவை பாரதிதாசன் திடலில் இருந்து காந்தி திடலுக்கு பல்வேறு செவிலியர் கல்லூரி மாணவ, மாணவிகள் அணி வகுத்து வந்தனர். ஊர்வலத்தின் முடிவில் மக்கள் தொகை விழிப்புணர்வு வாகன பிரசாரத்தை கடற்கரையில் முதல்-அமைச்சர் நாராயணசாமி கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

### நாராயணசாமி

மேலும் ஊர்வலத்தில் அணி வகுத்து வந்த கல்லூரிகளை பாராட்டி பரிசுகளையும் வழங்கினார். அப்போது முதல்-அமைச்சர் நாராயணசாமி பேசியதாவது:-

மக்கள்தொகையில் நாம் சீனாவுக்கு அடுத்தபடியாக உள்ளோம். தற்போது சீனாவில் ஒரு குடும்பத்துக்கு ஒரு குழந்தைதான் உள்ளது. நமது நாட்டின் மக்கள் தொகை 121 கோடியாக உயர்ந்துள்ளது.

அவர்களுக்கு தேவையான கட்டமைப்புகளை உருவாக்கிட முனைந்து செயல்பட்டு வருகிறோம். புதுவையில் குழந்தைகள் பிறப்பு அதிகம் என்கின்றனர். ஆனால் புதுவை அரசு ஆஸ்பத்திரியில் தமிழகத்தை சேர்ந்தவர்கள் அதிக அளவில் (60 சதவீதம்) பிரசவத்துக்காக சேர்க்கப்படுகின்றனர்.

### குடும்ப கட்டுப்பாடு

மக்கள்தொகை கட்டுப்பாடு தொடர்பாக கிராமப்புற மக்களுக்கு விழிப்புணர்வு தேவை. இதுதொடர்பாக நீங்கள் சனிக்கிழமைகளில் அவர்களை சந்தித்து குடும்ப கட்டுப்பாட்டின் அவசியத்தை விளக்கவேண்டும். ஆட்சியாளர்களாகிய நாங்கள் குடும்ப கட்டுப்பாட்டை கடைபிடித்துள்ளோம்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு புதுவை மாநிலத்தின் மக்கள் தொகை $7\frac{1}{2}$ லட்சமாக இருந்தது. ஆனால் தற்போது அது 13 லட்சமாக உயர்ந்துள்ளது.

### சுற்றுலா திட்டங்கள்

புதுவை மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை பெருக்கிட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. சமீபத்தில் பிரெஞ்சு அரசு உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ள ரூ.1,450 கோடி மதிப்பிலான குடிநீர் திட்டங்களுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. அதேபோல் ரூ.107 கோடி மதிப்பிலான சுற்றுலா திட்டங்களுக்கும் அனுமதி பெற்றுள்ளோம்.

புதுவை மாநில பட்ஜெட்டில் 6 சதவீத நிதியை மருத்துவத்துறைக்கும், 8 சதவீத நிதியை கல்வித்துறைக்கும் ஒதுக்கி உள்ளோம்.

இவ்வாறு முதல்-அமைச்சர் நாராயணசாமி பேசினார்.

நிகழ்ச்சியில் சுகாதாரத் துறை அமைச்சர் மல்லாடி கிருஷ்ணாராவ், செயலாளர் பாபு, புதுவை அரசு ஆஸ்பத்திரியின் மருத்துவ கண்காணிப்பாளர் மோகன்குமார் உள்பட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.